

“ தேசத்தின் தாய் ”

திருமதி. அமிர்தவள்ளி மாரியப்பன்

(“ஹீரோ ஆஃப் பட்டாலிக் ” மேஜர் சரவணன். வீர சக்ரா அவர்களின் தாயார்)

“ தேசத்தின் தாய் ” என்று இந்திய அரசால் கௌரவிக்கப்பட்ட திருமதி. அமிர்தவள்ளி மாரியப்பன் அவர்களை பற்றி... இவர் 1948 ம் வருடம் ஜுலை மாதம் 18 ம் தேதி பிறந்தார். இந்திய ராணுவத்தில் பணிபுரிந்த திரு. ஆதி மாரியப்பன் அவர்களை தனது வாழ்கை துணையாக ஏற்றுக் கொண்டவர். இவர்களுக்கு ஒரே புதல்வனாக பிறந்த திரு. சரவணன் அவர்களையும் இந்த தேசத்தை பாதுகாக்க ராணுவத்தில் சேர்த்து ஒரு மாபெரும் தமிழ் வீரனை தந்த பெருமைக்குரியவர்.

தமது இரு மகள்களில் ஒருவரை மக்களுக்கு பணியாற்றும் மருத்துவராகவும் மற்றொருவரை மென்பொருள் பொறியாளராகவும் உருவாக்கிய இலட்சியமிக்கவர். ராணுவக் குடும்பத்தில் இருந்ததால் தேசத்தின் பல பகுதிகளில் வசித்து அதன் மொழி பண்பாடு மற்றம் கலாச்சாரங்களை பற்றி அறியப்பெற்ற தன்னம்பிக்கையும் துணிச்சலுமிக்கவர்.

தனது கணவர் லெட்டினன்ட். கர்னல். ஆதி மாரியப்பன் அவர்கள் 1989 ஆண்டு இலங்கையிலிருந்த இந்திய படையில் முதன்மை மருத்துவராக பணியாற்றிவிட்டு தாயகம் திரும்பும் வழியில் இயற்கை எய்தினார். மனந்தளராத அவர்கள் தனது மகன் திரு. சரவணன் அவர்களை 1995 ம் வருடம் பீகார் படைபிரிவு இராணுவத்திற்கு வீரானாக அனுப்பினார். நாட்டின் எல்லையை எதிரிகள் ஆக்கிரமித்த போதெல்லாம் அவர்களை முறியடிக்க முன்னனியில் பாய்ந்து சென்றவர் மேஜர் சரவணன் அவர்கள்.

1999ம் வருடம் 14299 அடி உயரத்தில் உள்ள பட்டாலிக் பகுதியில் எதிரிகளின் குண்டு மழைகளுக்கு அஞ்சாத முன்னேறி தனது ஏவுகணையால் பகைவர்கள் இருவரை வீழ்த்தினார். அதில் பலத்த காயமடைந்து இரத்தம் பீறிட்ட போதும் தளராது போராடி நேருக்கு நேர் இரு எதிரிகளை வீழ்த்தி “ஆப்ரேஷன் விஜய்” என்று பெயரிட்ட யுத்ததின் வெற்றிக்கு வித்திட்ட அந்தநேரத்தில் பாய்ந்த வந்த குண்டு ஒன்று மேஜரின் தலையை துழைத்தது. அந்த யுத்தத்தில் தன்னுடைய மகனை இழந்து நாட்டிற்காக தியாகம் செய்தார். உயிர் பிரிந்து தாய் நாட்டின் மண்ணை முத்தமிட்டபடியிருந்த தனது மகனின் வீர உடலை 37 நாட்களுக்கு பிறகே கண்டுபிடிக்கப்பட்டு துயிலகம் அனுப்பபட்டது.

மேஜரின் இந்த வீரதீர செயலை கௌரவப்படுத்தும் வகையில் பின்னாளில் பாரத அரசு “வீர சக்ரா” விருது வழங்கியது. இந்த துயரங்களிலெல்லாம் துவண்டு போகாமல் பெருமிதத்துடன்

நிமிர்ந்து நின்ற அவர்களை “தேசத்தின் தாய் ” என்றும் மேஜர் சரவணன் அவர்களை “ஹீரோ ஆ.்.ப் பட்டாலிக் ” என்றும் இந்திய அரசு பாராட்டி பட்டம் வழங்கி கௌரவித்தது .

மாறாத தாய் நாட்டின் மீது பற்று கொண்ட திருமதி. அமிர்தவள்ளி அவர்கள் தான் செல்லும் நிகழ்ச்சிகளில் இந்திய தேசிய கொடியின் பட்டையத்தை நினைவுப் பரிசாக வழங்கும் பழக்கம் கொண்டவர்.

இன்றைய இளைஞர்களை இந்திய இராணுவத்தில் சேர ஊக்குவிக்கும் நோக்கத்தோடு “ மேஜர் சரவணன் நினைவு அறக்கட்டளை ” ஒன்றை நிறுவி அதன் வாயிலாக பல்வேறு சமுதாய பணிகளையும் விழிப்புணர்வு பிரச்சாரங்களையும் கண்தானம் மற்றும் இரத்ததானம் போன்ற முகாம்களையும் மாணவ மாணவிகளுக்கு இலவச இராணுவ பயிற்சிகளையும் கொடுத்து தொடர்ந்து சேவை செய்து வருகிறார்.

அதன் ஒரு பகுதியாக தமிழக அரசின் முறையான அனுமதி பெற்று திருச்சி கண்டோன்மென்ட் பகுதியில் செயின்ட் ஜான் வெஸ்ட்ரி மேல்நிலைபள்ளி எதிர்புறம் தமிழக அரசால் தனக்கு வழங்கப்பட்ட நிதி உதவியிலிருந்து ரூ. 9 லட்சம் செலவில் நினைவகம் ஒன்றை நிறுவி பராமரித்து வருகிறார்.

மேலும் பல கிராமங்களில் மேஜர் சரவணன் பெயரில் இளைஞர் நற்பணி மன்றங்கள் அமைத்து இராணுவத்தில் சேர வழிகாட்டுதல் மற்றும் விழிப்புணர்வுகள் ஏற்படுத்தி வருகிறார்.

முப்படையில் சேர்வதற்கான பயிற்சிகளை கோவையில் இயங்கி வரும் Defence Academy பயிற்சி மையத்தில் ஏழை மாணவ மாணவிகளுக்கு சேருவதற்கான உதவிகளை செய்து நாட்டிற்கு சேவை செய்ய பல வீரர்களை உருவாக்கி வருகிறார்.

மேஜர் சரவணனின் நினைவாக ஆண்டுதோறும் செயின்ட் ஜோசப் கல்லூரியுடன் இணைந்து தேசிய மாணவர் படைகளுக்கிடையேயான அணிவகுப்பு சுழற்கோப்பை போட்டிகள் மற்றும் ஆர்.கே.வி கிரிக்கெட் அகாடமியுடன் இணைந்து கிரிக்கெட் சுழற்கோப்பை போட்டிகள் ஆகியவற்றை நடத்தி வருகிறார்.

முன்னாள் இந்திய ஜனாதிபதி மான்புமிகு திரு. A. P. J அப்துல்கலாம் அவர்கள் மேஜர் சரவணனின் நினைவிடத்தை பார்வையிட்ட போது இவரது சேவையை பாராட்டி “ நாட்டிற்காக தியாகம் செய்த குடும்பத்தினரின் முன்மாதிரியாக திகழ்கிறார்” என்று புகழாரம் சூட்டினார்.

மான்புமிகு தமிழக முதல்வர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் “முதலாவதாக போருக்கு சென்று கடைசியாக வீட்டிற்கு வந்த இந்த நாட்டின் உண்மையான தலைமகன். அவரின் தாயாரின் தேசப்பற்றையும் வீர உணர்வையும் நான் போற்றுகிறேன்” என்றும்

முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி அவர்களால் “ புறநானூற்றுத் தாய் ” என்றும் கௌரவிக்கபட்டவர். மேலும் தேசிய மற்றும் மாநில தலைவர்களின் நன்மதிப்பையும் பராட்டுகளையும் பெற்றவர் திருமதி. அமிர்தவள்ளி மாரியப்பன்.